1977 ஆகஸ்ட் 5] [திரு. க. உக்கிரபாண்டியன்]

அனுமதிக்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். ஒன்று, கோட்டைக்கு வரவேண்டும், அப்படி இல்லை என்றால் கோட்டைக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிற டாக்சிகளை அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குறிப்பிட்ட டாக்சி நம்பரைக் குறித்துக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்தை நேற்றைய தினம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாலே சட்டமன்ற உறுப்பினர்களை தொலைவில் கொண்டுபோகவேண்டுமென்று உத்திரவு போடப்படவில்லை. அனுமதி சீட்டு இல்லாதவர்கள் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தத் தொல்லை இருக்குமானால், உடனடியாக கவனித்து ஆவன செய்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் என்று போடப்பட்டிருக்கிற பேருந்துகளில், * * என்று போடப்பட்டிருப்பது முறைதானா, சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

3. அறிக்கை அளித்தல்.

விதி 82-ன் கீழ் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அளித்த அறிக்கை.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும்—நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது சட்டப் பேரவையில் நடந்த விவாதத்தில் 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் உணவு தானியங்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைப் பற்றி குறிப்பிடப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 3 (1)-வது பிரிவின்படி உணவு தானியங்கள் மற்றும் அப்பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள இதர பொருள்களின் மீது வரி 1 சதவிகிதமாக

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மூற்பகல் 9-36-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இருந்தாலும், அவைகள் தனி அறிவிக்கைகள் மூலம் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தன.

1976-ம் வருடம் மத்திய அரசு உணவு தானியங்களை (Cereals, "declared goods") என்று மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டதன் காரணமாக தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலும் உணவு தானியங்களை இரண்டாவது அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனினும் முன்பு இருந்ததை போல் உணவு தானியங்களுக்கு வரிவிலக்கு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நேற்றையதினம் எதிர்க்கட்சியின் சார்பில், எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் எழுப்பினேன். ஆனால் இந்த அறிக்கையில் அதைக் குறிப்பிடாதது உண்மையிலேயே வருந்தத் தக்கது. ஏனென்றால் விவாதத்திலே குறிப்பிட்டபோது என்று மாத்திரம் சொல்வது முறையா என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்க் கட்சியின் சார்பில், எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் சுட்டிக்காட்டி, உணவு தானியங்களுக்குக் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒரு சதவிகிதம் போடப்பட்டிருக்கிறதே, அதையும் நீங்கள் நிலைநாட்டி அந்த வரி உண்டு என்று சொல்லியிருக்கிறீர்கள், அதற்கு வரி விலக்கு செய்வீர்களா என்று கேட்டதற்கு இந்த அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே தான் அதைக் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் தான் கேட்டார்கள், என்பதைக் குறிப்பிடுவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இப்போதும் சேர்த்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு தானியங்களுக்கு ஒரு சதவிகிதம் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டது தொடர்ந்து இருந்து வருகிறது. ஆளுநர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.